D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC 213/2017

**P.W.**5

| | |
|---|---|
| Name | : **திரு.சுதாகர்** |
| Father/Husband Name | : திரு.ஜெயசீலன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் இல்லை. மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.** நான் தற்போது வடபட்டிணம் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி பிரேம்நாத்தை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 2017ம் வருடம் ஒரு நாள் காலை 7 மணியளவில் அடையாளச்சேரி அருகே விபத்து ஏற்பட்டு கும்பலாக இருந்தார்கள். நாங்கள் சென்று பார்த்தபோது போலிசார் எங்களை அழைத்து சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **(பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக</u>**

**அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 25.02.2017 ம் தேதி காலை 7 மணியளவில் சம்பவ இடமான அடையாளச்சேரி அருகே நான் இருந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நானும் பிரேம்நாத்தும் பார்வை மகசரில் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். இது குறித்து போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை—**

விபத்தில் இறந்த அசோக்குமார் என் உறவினர் என்றால் சரிதான். அதற்காக புகார் மனு எழுதி என்னிடம் பிரேம்நாத்திடமும் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் இறந்துபோன நபர் உறவினர் என்பதால் வழக்கிற்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(Sd) A.Kadhiravan.
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், திருக்கழுக்குன்றம்

Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC 213/2017

**P.W**.6

| | |
|---|---|
| Name | : திரு.பிரேம்நாத் |
| Father/Husband Name | : திரு.சேகர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடபட்டிணம் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி சுதாகரைத் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 25.02.2017ம் தேதி காலை 7 மணியளவில் அடையாளச்சேரி அருகே விபத்து ஏற்பட்டு கும்பலாக இருந்தார்கள். நாங்கள் சென்று பார்த்தபோது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். பின் எங்களை அழைத்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். பார்வை மகஜரில் நானும் சாட்சி சுதாகரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

விபத்தில் இறந்த அசோக்குமார் என் உறவினர் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று மட்டும் தான் நானும் சுதாகரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அப்போது தான் போலிசார் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். நாங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து மேற்சொன்ன கையெழுத்து போலிசார் என்னிடம் வாங்கினார்கள் என்றால் (சாட்சி ஆமாம் என்று ஆமோதிக்கிறார்) சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(Sd) A.Kadhiravan.
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், திருக்கழுக்குன்றம்